# FRIDAY SERMON 26-09-2014

## *The Heart - A Study (2)*

# இதயம் – ஓர் ஆய்வு (2)

**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

உலக மக்கள் அனைவருக்கும் சலாம் தெரிவித்தப் பிறகு ஹஸ்ரத் கலீ.ஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் தஷஹ்ஹீதும் தஅவ்வுசும் சூரா.ஃபத்திஹாவும் ஓதிக் கொண்டு இவ்வாறு கூறினார்.

கடந்த வெள்ளிக் கிழமை ஆரம்பித்த பிரசங்கத்தை தொடர்ந்துக் கொள்ளுவதற்கான சொர்க்கீய வாய்ப்பு வழங்கிய என் இறைவனுக்கு முதல் படியாக நான் நன்றியினைத் தெரிவிக்கின்றேன். அவன் அருளும் அவன் வழங்கும் ஞானவும் இல்லையென்றால் இவ்விஷயத்தை உங்கள் முன்னால் எடுத்துரைக்க என்னால் முடியாது. ஒரு பொழுதும் முடிந்து விடாத ஒரு சமுத்திரத்தைப் போன்று என் இறைவன் எனது இதயத்தில் அவனது அருள் கொடைகளை இறக்கிக் கொள்ளுகின்றான். அது மூலமாக உங்கள் இதயங்களைத் தூய்மைப் படுத்துவதற்கும் உங்கள் ஒவ்வொருவரிலும் பரிபூரணமான நிலையில் அல்லாஹ்வின் ஒளியை நுழைய செய்வதற்கும் அசாதாரணமான இந்த அருளும் ஒளியும் உங்களுக்கு பயன் படுவதற்கும். இன்ஷா அல்லாஹ்!

அல்லாஹ்வின் உதவியும் மார்க்க தரிசனவும் இல்லாமல், அவனது துணையும் கவனமும் இல்லாமல், ஞானத்தின் வழியில் என்னை அவன் நடத்திக் கொள்ளமல் இந்த மகத்தான வேலையில் ஈடுபட என்னால் இயலாது. எவ்வாறு அல்லாஹ் எனக்கு உதவி புரிகிறான் எவ்வாறு எனக்கு மார்க்க தரிசனம் வழங்குகின்றான். எவ்வாறு இந்த நூற்றாண்டில் அல்லாஹ் என்னை கலீ.ஃபாவாக தேர்ந்தெடுத்திருக்கின்றான் என்பதை எனக்கு மக்களுக்கு விளங்குவதற்கு மிக வருத்தமேயாகும். என்னை தேர்ந்தெடுத்தது மக்களல்ல மாறாக அல்லாஹ்வே ஆவான். ஆகவே நான் என் இறைவனுக்கு மேலும் நன்றியை தெரிவிக்கின்றேன். கடந்த வாரத்தில் துவங்கி வைத்த அதே விஷயத்தை தொடர்ந்துக் கொள்கின்றேன்.

நமது அன்பு குரிய தூதர் முஹமது முஸ்தபா (ஸல்) கூறியதாக ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கின்றது.

**“நீங்கள் ஒருவருக்கொருவர் பகைமை வைத்துக் கொள்ளாதீர்கள். ஒருவர் விலை பேசும் பொருளுக்கு அந்நபரின் முன்னால் வைத்து உயர்ந்த விலை கூறாதீர்கள். நீங்கள் ஒன்றுக் கொன்று வெறுத்துக் கொள்ளவோ புறக்கணித்துக் கொள்ளவோ செய்யதீர்கள். ஒருவர் வியாபாரம் செய்துக் கொண்டிருக்கும் வேளையில் அந்நபருக்கு இடையூர் விளைவிக்கும் வகையில் வியாபாரம் செய்யாதீர்கள். நீங்கள் அல்லாஹ்வின் அடிமைகளே ஆவீர்கள். ஆகவே நீங்கள் சகோதரர்களை போன்று வாழ்ந்து விடுங்கள். ஒரு முஸ்லீம் மற்றொரு முஸ்லீமின் சகோதரனே ஆவான். அவனது சகோதரனை அவன் அவமானிக்கவோ அவனிடம் பொய் கூறவோ அவனை தாழ்த்தப்பட்டவனாக எண்ணவோ அவனை விலைக் குறைத்துக் காணவோ கூடாது. “தக்வா” இங்காகும் (மூன்று தடவை தனது நெஞ்சை சுட்டிக் காட்டினார்) ஒரு முஸ்லீம் தனது நம்பிகையாளரான சகோதரனின் அனைத்து விஷயங்களையும் தூய நோக்கத்துடன் காண வேண்டும்., அவனது இரத்தம் அவனது பொருள் அவனது அந்தஸ்து”. (முஸ்லீம்)**

அற்புதம் என கூறலாம்! தனது தோழர்களிடவும் தனது சமுதாயத்தினிரடவும் இவ்விஷயம் அனைத்தும் கூறியிருந்தும், திரு குர் ஆனிலும் திருச் சுன்னத்திலும் அவ்விஷயங்களை குறிப்பிட்டிருந்தும், முஸ்லீம் என்றும் இஸ்லாமின் பாதுகாவலர்கள் என்றும் உரிமைப் படுகின்ற அஹ்மதிகள் எவரும் இந்த கட்டளைகளை கவனிப்பதில்லை. மற்று முஸ்லீம்களைப் போன்று அஹ்மதியா முஸ்லீம்களும் இஸ்லாமிற்கு மாறான பௌதீக ஈர்ப்புவலையத்திற்குள் வீழ்ந்து, உண்மையான இஸ்லாமிக போதனைகளிலிருந்து வெகு தூரம் சென்றடைந்தார்கள். உண்மையான என் தோழர்களும் என்னை பின்பற்றுகின்றோர்களும் சாத்தானின் ஈர்ப்பில் அகப்பட்டு, நேர்மையான பாதையிலிருந்து தடுமாறி நம்பிகையாளரான தன் சகோதரனை பகைத்துக் கொள்ளும் நிலை உருவாகக் கூடாது என்பதாகும் என் பிரார்தனை. அல்லாஹ் உங்கள் அனைவரையும் இச்செயல்களிலிருந்து இரட்சிப்பானாக. ஆமீன்.

அஹ்மதியா ஜமா அத்து உட்பட ஏராளமான இஸ்லாமிக ஜமா அத்துகளின் ஆட்சி முறைகளில் நிகழ்ந்து வரும் விஷயங்களை பார்க்கும் பொழுது வேதனை வருகின்றது. இஸ்லாமின் பாதுகாவலர்கள் என்று உரிமைகோரும் அஹ்மதிகள் கூட தங்கள் பிராச்சரம் செய்து வரும் விஷயங்களை செயலுக்கு கொண்டு வருவதில்லை.

எராளமான மக்கள், நம்பிக்கையாளரான தங்களின் சகோதரனுக்கு எதிரில் வஞ்சனை செய்கின்றார்கள். ஜமா அத்து ஆட்சி அமைப்பின் உயர்ந்த பொறுப்புகளை கையாளுகின்றவர்கள்க் கூட இறை கட்டளைகளையும் திரு சுன்னத்தையும் ஆதரிப்பதில்லை. ஏனைய முஸ்லீம்கள் பொதுவாகவும், அஹ்மதிகள் குறிப்பாகவும் இஸ்லாமின் சட்ட அமைப்பை மதிப்பதில்லையென்றால் ஹஸ்ரத் முஹமது (ஸல்) வின் உம்மத்தைக் குறித்து சற்று சிந்தித்து

பாருங்கள். அஹ்மதியா ஜமா அத்தின் தலையகமே இவ்வாறென்றால் ஒவ்வொரு சுற்று வட்டாரத்தை சார்ந்த ஜமா அத்தின் (மௌரீஷியஸ்) நிலை எவ்வாறிருக்கும். ‘‘தக்வா’’ உண்டு என கூறுகின்றவர்கள் ஏராளமாகும். ஆனால் அவர்கள் தங்களின் அஹ்மதியா சகோதரர்களுக்கு ஏதிராக வஞ்சனை செய்கின்றார்கள். அவ்வகையிலான எராளம் நபர்களை நான் அறிவேன். மௌரீஷியஸ் அஹ்மதியா ஜமா அத்தின் நிலை இவ்வாறென்றால் உலகமனைத்துமுள்ள அஹ்மதியா ஜமா அத்தின் நிலை எவ்வாறிருக்கும். கலீ.்.பத்துல் மஸீஹின் பிரதிநிதிகளின் அதாவது தக்வாவுடையவர்களாக வாழ கடமைபட்டவர்களின் நிலை இன்று மிக பரிதாபமாகும். அஹ்மதியா சகோதர சகோதரிகள் தங்களின் கடினமான உழைப்பின் மூலமாக வழங்கும் நன்கொடைகளை (சக்காத், சந்தா, தஹ்ரீஹெ ஜதீத் போன்றவை) அனுமதியன்றி கைவசப்படுத்திக் கொள்ளுகின்றார்கள். அவர்களின் கீழ் பணிபுரிந்து வருகின்றவர்களுக்கு ஊதியம் கூட வழங்காமல் அவர்களை துரத்துகின்றார்கள்.

நான் இதை எடுத்துக் கூறக் காரணம், 1987- 2000 கால கட்டங்களில் நான் ஜமா அத்தே அஹ்மதியாவில் ஒரு வேலைக் காரனாக இருந்தேன். மௌரீஷியஸ் ஜமா அத்தும் அதன் அமீரும் எனக்கு அது வரையிலும் அதற்கான ஊதியம் வழங்க வில்லை. எனது நிண்ட கால சேவையை முன் வைத்து எவ்வித சலுகைகளும் வழங்கவில்லை. ஒவ்வொரு தொழிலாளர்களுக்கும் அதற்கான உரிமையுண்டு. வருடங்கள் 14 கடந்து விட்டது, என்னிடம் மேற் கொண்ட ஒப்பந்தத்தை அவர்கள் கடைப் பிடிக்க வில்லை. அந்த கடன் இதுவரையிலும் அவர்கள் வழங்கவில்லை. இறை சட்டத்தின் அடிப்படையிலும் தூதுவ அரசன் திரு (ஸல்)வின் போதனைகளின் அடிப்படையிலும், நாட்டின் சட்ட அமைப்பின் அடிப்படையிலும் என் உரிமைகளை அவர்கள் மதிக்க வேண்டும். என்னிடம் வைத்துக் கொண்ட ஒப்பந்தத்தை அவர்கள் நிறைவேற்ற வேண்டும். ஆனால் உண்மையான முஸ்லீம்கள் என்ற நிலையில் அவர்களின் கீழ் பணி புரிந்த தொழிலாளிக்கு இது வரையிலும் ஊதியம் வழங்க வில்லை. ஒரு ஓட்டினர் என்ற நிலையில் ஜமா அத்துக்கு தொண்டாற்றி, அது வழியாக கிடைக்கும் வரவு மூலமாகவே எனக்கு வாழ வேண்டியது என ஏன் அவர்கள் எண்ணவில்லை. அது மட்டுமின்றி அவர்கள் என் மீது சமூக புறக்கணித்தலும் ஏற்படுத்திக் கொண்டார்கள். இறை நோக்கத்தின் அடிப்படையிலும் பௌதீக சட்டத்தின் அடிப்படையிலும் இந்த இரண்டு விஷயவும், அதாவது எனக்கு ஊதியம் வழங்கிக் கொள்ளமல் இருந்ததும் சமூக புறக்கணித்தல் என் மீது ஏற்படுத்திக் கொண்டதும் சட்ட விரோதமான செயலேயாகும். நான்காவது கலீ.்.பா இவ்விஷயத்திற்கு செவிசாய்க்கவில்லை என்று மட்டுமின்றி ஐந்தாம் கலீ.்.பாவும் அவ்வாறே அன்னிஸ்லாமிக பாதையிலையே நிலை கொள்கின்றார்! ஹஸ்ரத் முஹமது (ஸல்) கூறினார். **ஒரு உண்மையான முஸ்லீம் தன் சகோதரனின் கண்ணியத்தையும் பொருளையும் பாதுகாக்கின்றவன் ஆவான்.** மட்டுமல்லாமல் நமது அன்புக்குரிய தூதர் (ஸல்) கூறிகின்றார்கள். **‘‘ஒரு தொழிலாளியின்**

**வியர்ப்பு உணங்கிக் கொள்வதற்கு முன்னவே அவனக்கு உரிமையான ஊதியம் வழங்கிக் கொள்ள வேண்டும்’’.**

ஜமா அத்தின் பணத்தை திருடிக் கொள்கின்ற அஹ்மதியா முஸ்லீம்கள், அஹ்மதியா சகோதரர்களுக்கு ஏதிராக சதி திட்டம் தீட்டும் அஹ்மதிகள், போன்ற அனைவர்களும் இப்போதும் ஜமா அத்துக்குள் இருக்கின்றார்கள். அவர்களின் மீது எவ்வகையிலான சமூக புறக்கணித்தலும் இல்லை. அவர்களைனைத்தும் ஜமா அத்துக்குள் உண்டு என்று மட்டுமல்லாமல் ஜமா அத்தின் அனைத்தும் நிகழ்ச்சிகளுக்கும் பங்கேற்க அவர்களுக்கு அழைப்பு விடுப்பதும் உண்டு. உண்மையில் குற்றவாளிகள் மதிப்புக்குரிய நபர்களை போன்று நிலை கொள்கின்றார்கள். மௌரீஷியாவில் இந்த இறை அருள்களுடையவும் அடையாளங்களுடையவும் ஆரம்பக் கட்டத்தில் இந்த எளியவனையும் எனக்கு உதவியாக இருந்த சபறுல்லாடோமின் சாஹிபையும் ஜமா அத்தில் இருந்து வெளியேற்ற மறைவான திட்டங்கள் தீட்டினார்கள். இந்த எளியவனுக்கு கிடைத்த இறைவெளிப்பாடுகளை குறித்து அன்றைய கலீ.ஃ.பா (மிர்ஸா தாஹீர் சாஹீப்)வை சபறுல்லாடோமின் சாஹீப் தெரியப்படுத்தியிருந்தார். அல்லாஹ் என்னிடம் பேசுகின்றான். என்ற ஒரேயொரு காரணத்தால் என்னையும் எனக்கு உதவி புரிந்த சபறுல்லாடோமின் சாஹிபையும் ஜமா அத்தில் இருந்து வெளியேற்ற அவர்கள் வழிகள் தேடிக் கொண்டார்கள். மனித கரங்களால் தேர்ந்தெடுக்கின்ற கிலா.ஃ.பத்துக்கு நான் ஒரு தடங்கலாவேன் என அவர்கள் அஞ்சியிருப்பார்கள். தக்வா இழந்த இதயங்கள் தலையகம் ஆளும் காலம் வரையில் இவ்வாறே எதிர்பார்க்க இயலும். அல்லாஹ் தேர்ந்தெடுத்து, அவன் என்னிடம் பேசுகின்றான் என்ற ஒரே யொரு காரணத்தால் என் மீது சாப வார்த்தைகளை கொட்டிய ஒரு கலீ.ஃ.பாவவையும் அவரின் நண்பர்களையும் பற்றி சற்று கற்பனை செய்து பாருங்கள்.

**அவர்களைப் பொறுத்த வரையில் இறை வெளிப்பாடுகள், மனித ஆன்மாவுடையவும் இதயத்தினுடையவும் ஒளி, மனிதனின் உண்மையான சீர் அமைப்பு, இவையாவும் ஹராம் ஆன விஷயமாகும்! வஞ்சனையும் கொள்ளையும் அவர்களைப் பொறுத்தவரையில் ஹலால் ஆகும். ஜமா அத்தே அஹ்மதியத்தின் நவீன காலம்! கடந்த கால உண்மையான அஹ்மதியா முஸ்லீம்கள் ஏராளமான தியாகங்கள் செய்தனர். அவர்கள் அஹ்மதியா ஜமா அத்தை உன்னதமான இடத்தை எட்ட வைத்தார்கள். இறைவனின் அருள்கள் மூலவும் அவனது வல்லமை மூலவும் ஜமா அத்து வென்றது. ஆனால் இன்று புது தலைமுறைகள் இந்த வெற்றியை எட்டி மிதிக்கின்றார்கள். இஸ்லாமிக போதனைகளில் இருந்ததும், திரு நபி (ஸல்) வின் பாடங்களிலிருந்தும், ஹஸ்ரத் மிர்ஸாகுலாம் அஹ்மது (அ) மின் சீரமைப்பிலிருந்தும், அவர்கள் வெகு தூரம் சென்று விட்டார்கள். வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அ) மின் அன்றைய போதனைகளுக்கு ஏதிராக பொது முஸ்லீம்கள் நிலை கொண்ட நேரம் நாம் இவ்வாறு கூறியிருந்தோம். ‘‘அவர்கள் வழிகேடின் பாலும் தவறின் பாலும் நிலை கொள்கின்றார்கள் என!’’**

**ஆனால் அல்லாஹ் இப்போது மற்றொரு மஸீஹை தோற்று வித்த நேரம், இறைவனால் தேர்ந்தெடுத்து நியமித்துள்ள மஸீஹ்க்கு எதிராக அவர்கள் இன்று நிலை கொள்கின்றார்கள். இறுதி நாள் வரை இறை வெளிப்பாடுகளின் வாசல் திறந்திருக்கும் என்று பிரச்சாரம் மேற் கொண்டவர்களே இன்று மத சீரமைப்புக்காக இறைவனால் தோற்றுவிக்கப்பட்டவருக்கு ஏதிராக, அல்லாஹ்வின் கலீ∴பாவுக்கு எதிராக, மஸீஹ்க்கு எதிராக, அல்லாஹ்வின் தூதனுக்கு எதிராக, நிலை கொள்ளுகின்றார்கள்.**

தூய்மையான இதயங்கள் கறைப் பிடித்ததாக பரிணமிக்கின்றது. கறைப்பிடித்த இதயம் பொன்னைப் போன்று மாறுகின்றது. பொன்னை இப்போது எரிந்து நாசமாகப் போவதற்கு கொடும் தீயில் கொட்டுகின்றார்கள். அதனால் இவர்களுக்கு தக்வாவை எட்ட முடிவதில்லை. என் சகோதர- சகோதரிகளே! அல்லாஹ்வின் திட்டங்கள் அற்புதமானதாகும். இறைக் கட்டுப்பாடுதல் மூலம் இயங்குகின்ற ஒருவரின் மீது எவராலும் கட்டளை விடுவிக்கயிலாது. அல்லாஹ்வின் சக்திக்கும் திட்டத்திற்கும் எதிராக எவருக்கும் நிலை கொள்ளவும் முடியாது. அல்லாஹ்விடம் கட்டளையிடவோ, மற்றொரு தூதனை அனுப்பிவை என கூறவோ எவராலும் ஆகாது. உலகிற்கு தேவையென்று அவன் நினைக்கும் போதெல்லாம் அவனது தூதர்களை அவன் நியமித்துக் கொண்டிருந்தான். சொர்க்கத்திலிருந்து பொழியும் தூய்மையான தண்ணீரைக் கொண்டு அவன் இதயத்தை தூய்மையாக்குகின்றான். மனிதனுக்கு ஞானம் இல்லாத விஷயத்தை அவன் கற்பிக்கின்றான். மறைந்துப் போன உண்மையினை அவன் வெளியே கொண்டு வருகின்றான். அல்லாஹ்வின் வழியில் இடையூர் ஏற்படுத்தலாம் என எண்ணதீர்கள். அவர்கள் இதயத்தின் ஒரு எல்கையின் பால் அல்லாஹ்வின் போதனைகளை ஒதுக்கி வைக்க முயற்சிக்கின்றார்கள். அல்லாஹ்வின் போதனைகளின் மீது பார்வையிடாமாலும் அதற்கு செவி சாய்க்காமாலும் அவர்கள் வாழுகின்றார்கள். நிரந்தரமாக இப்பூமியில் வாழலாம் என்ற எண்ணத்தோடு அவர்கள் வாழ்கைப் பயணம் மேற்க் கொள்கின்றார்கள்.

இப்போது முஸ்லீம் உலகில் என்ன நிகழுகின்றது என பாருங்கள். ஆதாரத்தின் அடிப்படையில் ஏராளமான உதாரணம் என்னால் சுட்டிக் காட்ட முடியும். எனது இன்றைய பிரசங்க விஷயம் அதல்ல. நான் கூறிக் கொள்ள விரும்புகின்றது என்ன வென்றால்! இவர்களின் முடிவு மிக மோசமாகயிருக்கும் நிச்சயமாக! அவன் வாக்குறுதியின் படி கொஞ்சம் கொஞ்சமாக அவர்களை எவ்வாறு நாசத்தின் பால் எட்ட வைக்கின்றான் என பாருங்கள். அவர்களுக்கு என்ன நேர்கின்றது என அவர்கள் கூட அறிவதில்லை. அவர்களின் மீது அவன் நாசத்தை இறக்கிக் கொண்டேயிருப்பான். இறைத் தூதனுக்கு எதிராக திட்டங்கள் தீட்டவும் செயல்படவும் செய்தது மூலமாகவே இவ்வகையான இறை தண்டனைகளுக்கு அல்லாஹ் அவர்களை ஆளாக்கி கொள்வது. இந்த எளியவனுக்கு எதிரில் அவர்கள் மிக மோசமான நிலையில் செயல்பட்டது காரணம் அல்லாஹ் அவர்களின் ஆரோக்கியத்தை இழக்க செய்யவும் அதிகமான ஊதியம் பெற்றிருந்தோர்களை அதிலிருந்து அவன் வெளியேற்றவும் செய்வான். எல்லோரிடத்திலும்

அன்பு எவரிடவுமில்லை பகைமை என்று அவர்கள் கூறுகின்றார்கள். ஆனால் அவர்களின் இதயம் முழுவதும் பகைமையே ஆகும். இறை ஒளி இதயத்தில் நுழைவதை தடுத்துக் கொள்வதால் உண்மையான அன்பும் சகோதரத்துவவும் அவர்களில் உற்பத்தியாவதில்லை. அல்லாஹ் அவனது வெளிப்பாடுகள் மூலம் என்னை தெரிவித்திருக்கின்றான். எனக்கு எதிராக அவர்கள் எவ்விதமெல்லாம் சதி திட்டங்கள் தீட்டினார்களோ அதை போன்றே அல்லாஹ் அவர்களுக்கு எதிராக செயல்படுவான் என. பௌதீகவும் ஆன்மீகவுமான அனைத்து விஷயங்களிலும் அவர்கள் என்னிடம் மிக மோசமாகவே பருமாறி கொண்டார்கள். அல்லாஹ் எனக்கு உறுதி அளித்துள்ளான். அதாவது நான் கூறிய இந்த அஹ்மதியா முஸ்லீம்கள் இஸ்லாத்தினுடையவும் அஹ்மதியத்தினுடையவும் பாது காவலர்கள் என கூறும் அவர்களும், மனிதர்கள் தேர்ந்தெடுத்த கலீ∴பாவும் அவரின் ஆட்சி செயல் குழுவும், குடும்ப அந்தஸ்தின் பெயரால் பேருவகையடைகின்றவர்களும் அவ்வகையாளர்களான மற்றுள்ளவர்களும் பாவ மன்னிப்பைக் கோரவில்லையென்றால் தவறான வழிகளை தவிற்கச் செய்ய வில்லையென்றால் அவர்களின் வாழ்கையை சீரமைக்க வில்லையென்றால் அல்லாஹ் அவர்களை உன்னதமான இடத்திலிருந்து ஆழத்தின் பால் வீசி எறிந்து விடுவான். அவர்களின் எதிர்காலம் முழுமையாக நாசமாகயிருக்கும். அவர்களின் நாசத்தின் நாள்கள் எட்டிக் கொண்டேயிருக்கின்றது.

என் இறைவனிடம் எனது எளிமையான பிரார்தனை இவ்வாறாகும். ‘‘என் அல்லாஹ்! ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின், எனது ஜமா அத்தின் அனைத்து உறுப்பினர்களையும், இஸ்லாமின் உண்மையான போதனைகளைக் குறித்து சிந்திக்கின்றவர்களாக மாற்றுவாயாக! நம்பிகையாளர்களான தங்களின் சகோதரர்களிடத்தில் முற்றிலும் நேர்மையுடன் பருமாறிக் கொள்பவர்களாக அவர்களை ஆக்குவாயாக! அவர்களின் இதயங்களை அன்பும் சகோதரத்துவமும் கொண்டு முழுமைப்படுத்துவாயாக! பொறாமையிலிருந்து அவர்களின் இதயங்களை பாதுகாப்பாயாக! காரணம் பொறாமை என்பது முஸ்லீம்களின் மத்தியில் குழப்பத்தை உருவாக்கும் பொருளாகும். அது அவர்களை நாசத்தின் பால் எட்ட வைத்துவிடும். எனது தோழர்களுக்கும் நம்பிகையாளர்களுக்கும் ஆன்மீக அழிவு ஏற்படாமலும் அவர்கள் தீய சிந்தனைகளில் அகப்பட்டு விடாமலும் பாதுகாப்பாயாக! ஆமீன்.

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் அமைப்பு உருவாகியுள்ள எல்லா இராஜியங்களையும் சார்ந்த எனது பிரிய சகோதர- சகோதரிகளே! உங்களின் அமீர் மார்களுக்கு கட்டுப்பட்டு செயல்ப்பட நீங்கள் கடினமான முயற்சி செய்யுங்கள். உங்களை தக்வா மூலமாக நேர் விழியில் நடத்தி செல்ல அவர்கள் முயற்சிக்கும் பொழுது நீங்கள் அவர்களுக்கு முழுமையாக கட்டுப்படுங்கள். அவர்கள் இவ்வாறு செய்வது, என் மேல் பார்வையின் கீழ் ஆகும். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்கள் ஒரு குடும்பத்தைப் போன்று வாழ வேண்டும். அது ஒரேயொரு உடம்பு போலாகும். உங்களை அழிவின் பால் ஈர்த்துக் கொள்கின்றோர்களை நீங்கள் பின் தொடர்ந்து கொள்ளதீர்கள் மாறாக அவர்களை பின் பற்றிக் கொண்டால் நான்

கூறுகின்றேன்! நீங்கள் துரதிர்ஷ்ட சாலிகளாவீர்கள்! நீங்கள் இழந்தவர்களாவீர்கள்! உங்களுக்கு ஏராளமான அவமானத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கும்! நமது ஜமா அத்தில் இவ்வாறு நிகழாமலிருக்க நான் பிரார்தனை செய்கின்றேன். எல்லா நாடுகளிலுமுள்ள சஹீஹில் இஸ்லாமை சார்ந்த அமீர்மார்களோடு நான் கூறுகின்றேன்.

தொழிலாளிகளின் உரிமைகளை நீங்கள் மதியுங்கள்! அது சதாரணமான தொழிலாளர்களானாலும் சரி, ஜமா அத்தின் தொழிலாளிகளானாலும் சரி. அவர்களின் ஊதியம் முழுமையாக வழங்குங்கள். வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். முடிவதும் சீக்கிரம் கடன் முழுவதும் மீட்டுங்கள். நீங்கள் அனைவர்களும் சகோதரர்களே ஆவீர்கள். நீங்கள் ஒவ்வொரு வரும் தனது நம்பிகையாளரான சகோதர – சகோதரிகளுக்கு முன் மிக மதிப்புடையவர்களே ஆவீர்கள். நீங்கள் உங்களின் சகோதர சகோாரிகளின் உணர்சிக்கு பங்கம் விளைவிக்காதீர்கள். இஸ்லாமின் முறைப்படியே இஸ்லாமின் தூதுச் செய்தியினை பிரச்சாரம் செய்ய கடினமாக முயற்சியுங்கள். இஸ்லாமை பிரச்சாரம் செய்ய இஸ்லாமிற்கு மாறான வழிகள் தேடிக் கொள்ளாதீர்கள். நம் ஜமா அத்தின் தூதுச் செய்தியினை எட்ட வைப்பது நேர்மையான வழி முலமாகவே ஆக வேண்டும். இன்டர்நெட், பேஸ்புக் போன்ற சைட்டுகள் பயன்படுத்துகின்ற வேளையில் சரியான வழி மூலமாகவே ‘‘தஅவா’’ செய்ய வேண்டியது. தூதுச் செய்தியில் நவீனமான எதுவும் சேர்த்து விடாதீர்கள். அதவாது இஸ்லாமிக பிரார்தனைகளோடும் அதன் வசனங்களோடும் ஈர்ப்பு தன்மை வாய்ந்த இசைகளை சேர்த்து விடாதீர்கள். பேஸ்புக்கில் சில கசீதகள் நவீன பாடல்களைப் போன்று அமைத்து வரப்படுகின்றது. அல்லாஹ்வுடையவும் அவனது ரசூலுடையவும் பெயரினை தொடர்ந்து இசையும் தபலயும் பயன்படுத்துகின்றார்கள். இவை அனைத்தும் இஸ்லாமிற்கு மாறான விஷயமேயாகும். இது வழியாக ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் தவறான செய்தியினையாகும். மக்களுக்கு எட்டவைப்பது. ஆகவே உலகனைத்து முள்ள எனது தோழர்களிடம் நான் உபதேசிக்கின்றேன். பேஸ்புக் வழியும் இன்டர்நெட் வழியும் இஸ்லாமிற்கும் நமது ஜமா அத்திற்கும் கெட்ட பெயர் விளைவிக்கும் எல்லா மெட்டிரியல்சும் உடனே நீக்கம் செய்யுங்கள். ஒரு இறை தூதனின் முன் இவ்வாறு ஒரு பொழுதும் நிகழக் கூடாது.

இந்த நூற்றாண்டில் அல்லாஹ்வின் கலீ∴பா என்ற நிலையில், ஏனையவர்களுக்கு இந்நூற்றாண்டின் இறைச் செய்தியை பரப்ப நீங்கள் செய்யும் செயல்களை நான் பாரட்டுகின்றேன். அது பேஸ்புக் வழியாகியிருந்தாலும் சரி. ஆனால் அவையனைத்தும் பரிபூரணமாக இஸ்லாமின் முறைப்படியே ஆக வேண்டும். அல்லாஹ்வின் திருப்திக் கேற்ப நல்ல முறையில் செயல்படுங்கள். அல்லாஹ்வின் கோபத்தை ஈர்க்கும் எந்த செயலும் செய்யாதீர்கள் இன்ஷா அல்லாஹ்!

மட்டுமன்றி எனது பிரியமானவர்களே, ஏனையவர்களுக்கு உதவிபுரிய நீங்கள் எப்போதும் தயாராகயிருங்கள். ஏனையவர்களுக்கு உதவியளித்தால் நீங்கள் இழந்தவர்கள் ஆவீர்கள் என எண்ண வேண்டாம். உங்களின் நோக்கம் தூய்மையாகயிருந்தால் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு அனைத்து வழிகளும் திறந்து தருவான். நமது ஜமா அத்தின் கஜனாவு உன்னதமானதாகும். அல்வாஹ்வின் அருள்களும் உதவியும் மூலம் நமது ஜமா அத்தின் அனைத்து திட்டங்களும் முழுமைப் பெற்று விடும். இன்ஷா அல்லாஹ்!

அமைதியின் பலன் எதிர் காலத்தில் சுவைமிக்க உணவேயாகும். அந்த சுவை மிக்க உணவை மற்றவர்களுக்கு புசிக்க முடியும். இன்ஷா அல்லாஹ்! ஆன்மீக பார்வையற்றவர்களின் குருட்டை அல்லாஹ் நீக்கச் செய்வனாக! அவர்களின் உள் கண்களுக்கு அல்லாஹ் அற்புதமான நிலையில் பார்வை வழங்குவானாக! இதயம் துடிப்பது அல்லாஹ்வுக்காக மட்டுமாகட்டும். அவனது கட்டளையாவும் முழுமைப் பெற்று விடட்டும். இன்ஷா அல்லாஹ்!

எனது பிரசங்க விஷயத்தை தொடர்ந்து கொள்கின்றேன். தக்வாவின் அடையாளம் என்பது ஒரு நம்பிகையாளர் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கட்டுப்படுதல் ஆகும். அதைப் போன்றே ஷரி அத்தில் ஹராம் ஆக்கியுள்ள விஷயங்களிலிருந்து விலகிக் கொள்தல் என்பதும் தக்வாவின் அறி குறியாகும்.

**‘‘எவர் அல்லாஹ்வின் சின்னங்களை மேன்மைப்படுத்துகின்றாரோ நிச்சயமாக அது உள்ளச்சத்தால் ஆகும்’’ (22-34)**

ஒரு குத்சியான ஹதீஸில் அல்லாஹ் கூறியதாக ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கின்றது. என் இரகசியங்களில் இருந்துள்ள ஒரு இரகசியமாகும் நேர்மை. நான் விரும்புகின்ற அடியார்களின் இதயத்தில் நான் அதை நுழைய செய்வேன். ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள் தக்வாயுடையும் தப்லீக்கினுடையவும் வெற்றி இரகசியம் என்பது எளிமையும் இதய தூய்மையும் ஆகும். எல்லாம் வல்ல அல்லாஹ் திருக் குர் ஆன் மூலம் தூய தூதரிடம் இவ்வாறு கூறுகின்றான்.

**‘‘அல்லாஹ்வுடைய ரஹ்மத்தின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக நடந்து கொள்கிறீர். நீர் கடுகடுப்பானவராகவும் கடின சித்த முடையவராகவும் இருந்திருப்பீரானால் அவர்கள் உம் சமூகத்தை விட்டும் ஓடிப்போயிருப்பார்கள்’’.**

என் பிரசங்கத்தின் இரண்டாம் பகுதியை நான் நிறைவுப் படுத்துகின்றேன் ஈதுல் அத்ஹாவுக்கு பிறகு இதே விஷயத்தை தொடர்ந்து கொள்ளுவதற்கான தௌபீக் வழங்க நான் துஆ செய்கின்றேன். அதற்காக அல்லாஹ்விடத்தில் பிரார்த்தனை செய்து கொண்டு நான் முடித்துக் கொள்கின்றேன். என் தோழர்கள் அனைவரும் இவ்வாறு துஆ செய்ய நான் வேண்டுகின்றேன்.

“எனது அல்லாஹ்! உன்னை திருப்திப்படுத்துவதை நான் உன்னிடத்தில் கேட்கிறேன். உனக்கு திருப்தியில்லாத விஷயங்களிலிருந்து நான் உன்னிடம் அடைக்கலம் கேட்கின்றேன். என் எல்லா பாவங்களிலிருந்தும் என்னை தூய்மைப் படுத்த நான் உன்னிடம் பிரார்த்திக்கின்றேன். எனது தவறுகளிலிருந்து என்னை இரட்சிப்பாயாக! எனது இதயத்தை பரிசோதித்து அது முழுவதும் தக்வா கொண்டு நிறைப்பாயாக! பாவிகளின் பாவங்களுக்கு மன்னிப்பளிப்பவனே! பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக!


Issued by:

Jamaat Ul-Sahih-Al-Islam

Dawa Department

Tamil Nadu (Regd.No: A/693)

Web: www.jamaat-ul-sahih-al-islam.com

Translated by:

**Azim Ahmad**

Sadr Sahibul Faraj

Kerala / Tamil Nadu

E-Mail:azimahmad070@gmail.com

Cell: 9947181650

9789180817